**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை: செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ம் நாள் திங்கள்கிழமை**

**அசல் வழக்கு எண்.18/2024**

**இ.ம.எண்.04/2025**

வெள்ளையன் ...**மனுதாரர்/வாதி**

**/எதிர்/**

1) பாக்கியம்
2) கிருஷ்ணவேணி ..**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இம்மனு எனது முன்னிலையில் கடந்த 27.03.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.R.பாலசுப்ரமணியன் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சரவணன் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8, விதி 9 உடனிணைந்த பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/வாதியால் மேற்படி அசல் வழக்கில் வாதி தரப்பில் பதிலுரை தாக்கல் செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் மனுவின் சுருக்கம்:**

**2)** மனுதாரர் மேற்படி அசல் வழக்கின் வாதியாவார். கூடுதல் பதிலுரை தாக்கல் செய்வதற்கு சில முக்கியமான ஆவணங்கள் கை தவறுதலாக

காணாமல் போய்விட்டதால், அவைகள் தற்போதுதான் தேடி எடுக்க முடிந்தது. எனவே, மேற்படி ஆவணங்கள் அடிப்படையில் கூடுதல் பதிலுரையை உரிய காலத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை. இத்துடன் தாக்கலாகும் கூடுதல் பதிலுரையை உரிய காலத்தில் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து ஏற்றுக்கொள்ள உத்தரவாக வேண்டியது அவசியமாக உள்ளது. இல்லாவிடில் மனுதாரருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும். எனவே, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்மனுவுரையின் சுருக்கம்:**

3) மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மறுக்கின்றார். அசல் வழக்கில் மனுதாரர்/வாதியால் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யும், கற்பனையும் ஆகும். அவற்றை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். அவை அனைத்தையும் இந்த எதிர்மனுதாரர் முற்றிலுமாக மறுக்கிறார். இந்த எதிர்மனுதாரர்களின் கட்சி என்னவென்றால் மனுதாரரின் பாட்டானார் வெள்ளையன் என்பவருக்கு வைரசாமி மற்றும் கல்யாணசுந்தரம் ஆகிய இருவர் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி இருவரும், கடந்த 03.03.1973ம் தேதி பாகப்பிரிவினை ஏற்படுத்திக் கொண்டு பத்திரம் எழுதி பதிவு செய்துள்ளார்கள் என்பது இந்த எதிர்மனுதாரர்களுக்கு தற்போதுதான் தெரிய வருகிறது. 1ம் எதிர்மனுதாரரின் கணவரும், 2ம் எதிர்மனுதாரரின் தந்தையாரான வைரசாமிக்கு இரண்டு மனைவிகள். அதில் முதல் மனைவி சாரதா (எ) சாரதாகண்ணு, இரண்டாவது மனைவி பாக்கியம் (1ம் பிரதிவாதி) ஆவார்கள். மேற்படி சாரதா 1ம் எதிர்மனுதாரரின் உடன்பிறந்த சகோதரி ஆவார். மேற்படி சாரதாவுக்கு குழந்தைகள் இல்லாததால் அவரது விருப்பப்படி 2வது மனைவியாக

வைரசாமிக்கு 1ம் எதிர்மனுதாரரை திருமணம் செய்து வைத்தார். அவர்களுக்கு 2ம் எதிர்மனுதாரர் மகள் ஆவார்.

**4)** இறந்துபோன வைரசாமிக்கு பிரிந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள B அட்டவணை சொத்தை முழுவதும் இந்து கூட்டுக்குடும்ப சொத்து என்பதால், அதில் 2ம் எதிர்மனுதாரருக்கு மட்டுமே உரிமையுள்ளது. இறந்து போன வைரசாமியின் 1வது மனைவியாகிய சாரதாக்கும், பிரதிவாதிகளுக்கும் எந்த பாகப்பிரிவினையும் ஏற்படாத போது, அவருக்குரிய சொத்தை மனுதாரர், கடந்த 20.11.2013 அன்று கிரையம் பெற்றார் என்று சொல்வது சட்டத்திற்கு முரணானது. அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேலும், ஒரே நபரிடமிருந்து ஒரே தேதியில் மூன்று கிரையப் பத்திரம் மூலம் கிரையம் பெற என்ன அவசியம் ஏற்பட்டது என்பதையும் மனுதாரர் மனுவில் தெளிவுபடுத்தவில்லை.

**5)** வைரசாமிக்கு மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் கிடைத்த B அட்டவணை சொத்தில், இந்த மனுதாரருக்கோ அல்லது அவரது தந்தை கல்யாண சுந்தரம் என்பவருக்கோ எந்த உரிமையும், பாத்தியமும் இல்லை. தாவா C அட்டவணை சொத்து முழுவதும் இந்த எதிர்மனுதாரர்களுக்கு மட்டுமே பாத்தியப்பட்ட சொத்து ஆகும். வைரசாமிக்கு ஆண் வாரிசு இல்லை என்பதாலும், பிரதிவாதிகளுக்கு படிப்பறிவு இல்லை என்பதாலும், எதிர்மனுதாரர்களின் சொத்தை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் C அட்டவணை சொத்தை சேர்த்து மேற்படி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**6)** மனுதாரர் பாகப்பிரிவினை பத்திரத்தில் A அட்டவணையில் குறிப்பிடாத அல்லது தவறாக குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் விவரம் மற்றும் சர்வே எண்களை மேற்படி பத்திரத்தில் திருத்தம் செய்யாமல், தனது தாயார் மற்றும்

சகோதரியிடம் பொய்யான தகவலுடன் தனது பெயருக்கு, கடந்த 20.11.2013ம் தேதி ஒரு விடுதலை பத்திரம் ஏற்படுத்தியுள்ளார். அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மனுதாரர் தனது தாய் மற்றும் சகோதரியிடம் எழுதி வாங்கிய விடுதலை பத்திரத்திற்கு சாட்சியாக இருக்கும்படி தனது சித்தப்பா வைரசாமியின் முதல் மனைவி சாரதாவை அழைத்து சென்ற அன்றைய தினமே, அவரின் அறியாமையை பயன்படுத்தி மூன்று கிரையப்பத்திரத்தை பொய் சொல்லி கிரையம் பெற்று எழுதி வாங்கியுள்ளார். மேற்படி விவரம் இந்த அசல் வழக்கின் வழக்குரையை படித்துப் பார்த்தபோதுதான் இந்த எதிர்மனுதாரர்களுக்கு தெரிய வருகிறது.

**7)** மனுதாரர், அசல் வழக்கில் விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டும் கோர முடியாது. இந்த எதிர்மனுதாரர் மனு சொத்தில் அத்துமீறி வீடு ஏதும் கட்டவில்லை. இந்த எதிர்மனுதாரர்கள் வசித்து வந்த வீட்டின் சுவர்கள் இடிந்து விட்டதால் பராமரிப்பு பணியை மட்டுமே செய்து வந்தார்கள். மனுதாரருக்கு அசல் வழக்கில் நல்ல கட்சி இல்லை என்பதை அறிந்து வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே, இம்மனுவானது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:</u>**

**8)** மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**9)** இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியமும் இல்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**தீர்வு:**

**10)** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளைப் பரிசீலனை செய்கையில், மனுதாரர்/வாதியால் தாவா A முதல் C அட்டவணை சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக மேற்படி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேலும், மேற்படி அசல் வழக்கில் இந்நீதிமன்றத்தால் இரு தரப்பினர்களாலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து, எழுவினாக்கள் வனையப்பட்டு, மேற்படி அசல் வழக்கானது வழக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், இம்மனுவானது மனுதாரர்/வாதியால் மேற்படி அசல் வழக்கில் பதிலுரை தாக்கல் செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி வழக்கு கோப்புகளைப் பரிசீலனை செய்கையில், மேற்படி அசல் வழக்கில் தாவா சொத்துக்களைப் பார்வையிட்டு நில அளவையர் மூலம் அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் வேண்டி, மனுதாரர்/வாதியால் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டு தாவா சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் நில அளவையர் உதவியுடன் பார்வையிட்டு அளவீடு செய்து இந்நீதிமன்றத்தில் அறிக்கை மற்றும் வரைபடத்தையும் நில அளவையரின் வரைபடத்தையும் தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**11)** இந்நிலையில், மனுதாரர் தரப்பில் மேற்படி அசல் வழக்கில் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்வதற்கு சில முக்கியமான ஆவணங்கள் கை தவறுதலாக காணாமல் போய்விட்டதால், உரிய காலத்தில் பதிலுரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், மேற்படி ஆவணங்கள் தற்போதுதான் கிடைக்கப்பெற்றதால், உரிய காலத்தில் பதிலுரை தாக்கல் செய்யாத தவறை

மன்னித்து இம்மனுவை ஏற்றுக்கொள்ள வேண்டி வாதிடப்பட்டது. மாறாக, எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர் தாவா சொத்தைப் பொறுத்து, விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டுமே கோரமுடியாது என்றும், மனுதாரருக்கு அசல் வழக்கில் நல்ல கட்சி இல்லை என்பதை அறிந்து இவ்வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் கூறி இம்மனுவை தள்ளுபடி செய்திட வேண்டி வாதிடப்பட்டது.

**12)** இரு தரப்பு வாதங்களையும், வழக்கு கோப்புகளையும் நன்கு கவனமுடன் பரிசீலனை செய்கையில், தாவா சொத்துக்களைப் பொறுத்து வாதியின் தந்தை மற்றும் அவரது சகோதரரும் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பத்திரத்தின் மூலம், A அட்டவணை சொத்துக்கள் வாதியின் தந்தைக்கு பிரிந்து, அவரது இறப்பிற்கு பிறகு வாதிக்கு பாத்தியப்பட்ட A அட்டவணை சொத்தில் ஒரு பகுதியான B அட்டவணை சொத்துக்களைப் பொறுத்து வாதியின் தாயாரும், சகோதரியும் பதிவு செய்யப்பட்டு ஒரு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்ததாகவும், மேலும் தாவா C அட்டவணை சொத்துக்களைப் பொறுத்து மூன்று கிரைய பத்திரங்கள் மூலம் வாதி கிரையம் பெற்று அனுபவம் செய்து வருவதாகவும், எனவே தாவா A முதல் C அட்டவணை சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், வாதி அனுபவம் செய்து வருவதாகவும், வாதியின் அனுபவத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்வதாகக் கூறி, மேற்படி அசல் வழக்கை வாதி தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

**13)** மாறாக, மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகளால், வாதி கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்பட்டதோடு, B அட்டவணை சொத்தானது பிரதிவாதிகளின் இந்து கூட்டு குடும்ப சொத்து என்றும், அதற்கு 2ம் பிரதிவாதி மட்டுமே உரிமையுடையவர் என்றும், மேலும் C அட்டவணை சொத்தைப்

பொறுத்து வாதிக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட கிரையமானது சட்டத்திற்கு முரணானது என்றும், அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், தாவா சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டுமே கோரமுடியாது என்றும், எனவே மேற்படி அசல் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டி பிரதிவாதிகளால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**14)** இந்நிலையில், மனுதாரரால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையில் உள்ள சங்கதிகளை பரிசீலனை செய்கையில், மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தையும் மனுதாரரால் மேற்கண்ட பதிலுரையில் மறுக்கப்பட்டு கூறப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேலும், மேற்படி அசல் வழக்கின் வழக்குரையில், தாவா C அட்டவணை சொத்தைப் பொறுத்து கிரையப் பத்திரங்கள் ஏற்பட்ட வருடமானது தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் தாவா A அட்டவணை சொத்து விவரத்தில் 8வது அயிட்ட சொத்து விவரத்தில் தவறுதலாக நான்கு எல்லை விவரம் தட்டச்சு செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் தாவா A அட்டவணை சொத்து விவரத்தில் 9வது அயிட்ட சொத்து விவரத்தில் நான்கு எல்லை தவறுதலாக விட்டுபோய் விட்டதாகவும், மேலும் மேற்படி 9வது அயிட்ட சொத்து விவரத்தில் தவறுதலாக நான்கு எல்லை காட்டப்பட்டுள்ளது என்றும், மேலும் தாவா B அட்டவணை சொத்து விவரத்தில் புல எண்.1996/1 என்பதற்கு பதிலாக புல எண்.19996/1 என தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் தாவா C அட்டவணை சொத்து விவரத்தில் 3வது அயிட்டத்தில் மேற்படி புல எண்ணில் உள்ள கிணர் ஒன்றில் பொதுவில் 4ல் 1 பங்கு பாக பாத்தியமும் என்பதற்கு பதிலாக பொதுவில் 1ம் பாக பாத்தியம் என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளதாகவும்,

குறிப்பிட்டு மேற்படி பதிலுரையானது மனுதாரர்/வாதியால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**15)** இந்நிலையில், உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8, விதி 9ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள சட்டக் கோட்பாடுகளை பரிசீலனை செய்கையில், அசல் வழக்கில் பிரதிவாதியால் புது சங்கதிகள் கூறப்பட்டிருந்தாலோ அல்லது எதிரிடை கேட்புரிமை கோரப்பட்டிருந்தாலோ, அசல் வழக்கில் மேற்படி சங்கதிகளை மறுக்கும் பொருட்டும் அதற்கு பதில் அளிக்கும் பொருட்டும், கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ய வாய்ப்புகள் வழங்கலாம் என்று மேற்படி சட்ட பிரிவின் கீழ், பல வழக்கு தீர்ப்புகளில் மாண்புமிகு உயர்நீதிமன்றமும், மாண்புமிகு உச்சநீதிமன்றமும் மேற்கோள் காட்டியுள்ளதை இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொள்கிறது. மேலும், அவ்வாறு வாதியால் தாக்கல் செய்யப்படும் கூடுதல் பதிலுரையானது, அசல் வழக்கின் தன்மையையும் மாற்றுவதாக இருக்கக்கூடாது என்று பல உயர்நீதிமன்ற தீர்ப்புகள் வழிவகுத்துள்ளன.

**16)** இவ்வாறு இருக்கும் நிலையில், இம்மனுவுடன் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையை பரிசீலனை செய்ததில், மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை மறுத்து மட்டுமே மேற்படி பதிலுரையானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், மேற்படி அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் எவ்விதமான எதிர்கேட்புரிமையும் கோரப்படாத நிலையில், எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை மறுப்பதற்காக மட்டுமே பதிலுரை தாக்கல் செய்ய அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**17)** மேலும், மேற்படி அசல் வழக்கின் வழக்குரையிலும், தாவா சொத்து விவரத்திலும் மனுதாரர்/வாதியால் தவறாக பல விவரங்கள் தட்டச்சு

செய்யப்பட்டுவிட்டதாகவும், அவை தவறுதலாக காட்டப்பட்டுள்ளது என்றும், மனுதாரரால் மேற்படி பதிலுரையில் ஒப்புக்கொள்ளப்பட்டு குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. இவ்வாறு இருக்கும் நிலையில், மேற்படி அசல் வழக்கின் வழக்குரையில் தவறாக தட்டச்சுப் பிழை எதுவும் இருந்தாலோ அல்லது தவறாக சொத்துக்களின் நான்கு எல்லை விவரங்கள் காட்டப்பட்டிருந்தலோ, மனுதாரர்/வாதிக்கு மேற்படி அசல் வழக்கின் வழக்குரையை அதன் தன்மை மற்றும் இயல்பை பாதிக்காத வகையில், வழக்கு விசாரணை தொடங்குவதற்கு முன்பு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6, விதி 17ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் திருத்தங்கள் மேற்கொள்ள அனைத்து வகையிலும் உரிமையுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. அவ்வாறு இருக்கையில், மேற்படி அசல் வழக்கில் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ய மனுதாரரால் கோரப்பட்டுள்ள காரணமானது ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**முடிவாக,**

மேற்சொன்ன காரணங்களுக்காக, இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.04.20 12:50:39 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.04.20 12:50:44 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**